


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி

NAMADHU DHINA KANI


www.dhinakani.com

காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 330 | 4 Pages | 25.6.2025 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 02 | இதழ்: 330 | 4 பக்கங்கள் | 25.6.2025 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்**

**கொல்லாமை சூழும் நெறி**

**விளக்கம்:**

**நல்ல வழி என்று அறநூல்களால் சொல்லப்படுவது எது என்றால், எந்த உயிரையும் கொல்லாத அறத்தைப் போற்றும் நெறியாகும்.**

# “போலிப் பாசம் தமிழுக்கு.. பணம் எல்லாம் சமஸ்கிருதத்துக்கு..” அம்பலமான டேட்டா

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காட்டம்

சென்னை, ஜூன் 25

கடந்த 10 ஆண்டுகளில் சமஸ்கிருதத்தை மேம்படுத்த ரூ.2,533 கோடியை மத்திய அரசு செலவிட்டிருப்பது ஆர்டிஐ மூலமாக அம்பலமாகி உள்ளநிலையில், "போலிப் பாசம் தமிழுக்கு; பணமெல்லாம் சமஸ்கிருதத்துக்கு" என தமிழக முதல்வர் ஸ்டாலின் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

தமிழ் உள்ளிட்ட பிற செம்மொழிகளை புறக்கணித்து சமஸ்கிருதத்திற்கு அதிக அளவில் மத்திய பாஜக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது தகவல் அறியும் உரிமைச் சட்டம் (RTI) மூலம் அம்பலமாகியுள்ளது.

சமஸ்கிருத மொழிக்கு மிக அதிக நிதி

201415 நிதியாண்டு மற்றும் 202425க்கு இடையில் சமஸ்கிருதத்தை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு ரூ.2532.59 கோடியை செலவிட்டுள்ளது. இது மற்ற 5 பாரம்பரிய இந்திய மொழிகளான தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் ஒடியா ஆகியவற்றிற்கான மொத்த செலவான ரூ.147.56 கோடியைவிட 17 மடங்கு அதிகம் என்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் (RTI) மூலம் தெரிய வந்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும்

அதாவது, சமஸ்கிருதத்திற்கு ஒவ்வோர் ஆண்டும் சராசரியாக ரூ.230.24 கோடியும், தமிழ் உள்ளிட்ட மற்ற ஐந்து மொழிகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் ரூ.13.41 கோடியும் செலவு செய்துள்ளது மத்திய அரசு. இதில் தமிழ், சமஸ்கிருதத்தின் மொத்த நிதியுதவியில் 5% க்கும் குறைவாகவும், கன்னடம் மற்றும் தெலுங்கு தலா 0.5% க்கும் குறைவாகவும், ஒடியா மற்றும் மலையாளம் தலா 0.2% க்கும் குறைவாகவும் பெற்றுள்ளன.

தமிழை விட சமஸ்கிருதத்துக்கு 22 மடங்கு அதிக நிதி

2004ல் முதன் முதலாகச் செம்மொழி அங்கீகாரம் பெற்ற தமிழுக்கு, மொத்தம் ரூ.113.48 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. இது சமஸ்கிருதம் பெற்ற தொகையை விட 22 மடங்கு குறைவு.



இந்தியாவின் மக்கள்தொகையில் 22% மக்கள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் ஒரியா மொழி பேசுகிறார்கள். ஆனால் சமஸ்கிருதம் பேசுபவர்கள் மிகவும் குறைவான எண்ணிக்கையே. ஆனால், சமஸ்கிருதத்துக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டிருப்பது விமர்சனங்களுக்கு உள்ளாகி உள்ளது.

உலகம் முழுவதும் பிரதமர் நரேந்திர மோடி தமிழின் பெருமைகளை பேசி வருவதாக பாஜகவினர் தொடர்ச்சியாக கூறி வருகின்றனர். ஆனால், தமிழ் உள்ளிட்ட மொழிகளுக்கு பாஜக அரசு அநீதி இழைக்கிறது என எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி வருகின்றன.

ஸ்டாலின் காட்டம்

இந்நிலையில், சமஸ்கிருதத்துக்கு மட்டும் மிக அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை விமர்சித்துள்ள தமிழக முதல்வர் ஸ்டாலின், "சமஸ்கிருதம் கோடிக் கணக்கில் பணம் பெறுகிறது. தமிழ் மற்றும் பிற தென்னிந்திய மொழிகளுக்கு முதலைக் கண்ணீர் மட்டுமே கிடைக்கிறது. போலிப் பாசம் தமிழுக்கு; பணமெல்லாம் சமஸ்கிருதத்துக்கு!" எனத் தெரிவித்துள்ளார்.

# சிரியாவில் தேவாலயத்தில் தாக்குதல்: 22 பேர் பலி, 63 பேர் காயம்




டமாஸ்கஸ், ஜூன் 25

சிரியா நாட்டின் தலைநகரான டமாஸ்கஸ் நகரில் உள்ள புனித எலியாஸ் தேவாலயத்தில் நேற்று மாலை மக்கள் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தனர். அப்போது, ஐஎஸ் தீவிரவாத அமைப்பின் குழுவைச் சேர்ந்த ஒருவர், தனிநபராக அங்கு துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார். அத்துடன், தனது உடலில் மறைத்து வைத்திருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்துள்ளார்.

இந்த தாக்குதலில் 22 பேர் உயிரிழந்ததாகவும், 63 பேர் காயமடைந்ததாகவும் அந்நாட்டின் சுகாதாரத்துறை அமைச்சகம் கூறியுள்ளது. இந்த தாக்குதலுக்கு எகிப்து, பிரான்ஸ், அமெரிக்கா மற்றும் ஜோர்டான் கண்டனம் தெரிவித்துள்ளன. இந்த நேரத்தில் சிரியாவுக்கு ஆதரவாக நிற்பதாகவும் கூறியுள்ளன. பலியானவர்களில் குழந்தைகளும் அடங்குவர் என்று சில உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# நோபல் பரிசை டிரம்ப் மறந்து விட வேண்டியது தான்: ரஷிய முன்னாள் ஜனாதிபதி கிண்டல்



மாஸ்கோ, ஜூன் 25

ஈரான் மீது ஆபரேஷன் ரைசிங் லயன் என்ற பெயரில் கடந்த 13ந்தேதி இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. அப்போது, ஈரானின் அணு ஆயுத பயன்பாட்டுக்கு எதிரான தாக்குதல் இது என இஸ்ரேல் தெரிவித்தது.

இதனை தொடர்ந்து ஈரானும் பதில் தாக்குதலில் ஈடுபட்டது. இதனால், 2 நாடுகள் இடையே போர் பதற்றம் அதிகரித்தது. இந்நிலையில், ஈரானுக்கு எதிராக அமெரிக்காவும் போரில் இறங்கியது. ஈரானின் பர்தவ், நடான்ஸ் மற்றும் எஸ்பஹான் ஆகிய 3 அணு உலைகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளது.

இதற்காக அமெரிக்காவுக்கு ஈரான் கடும் எச்சரிக்கையை வெளியிட்டு உள்ளது. இதற்கு முன் பார்த்திராத பேரழிவை அமெரிக்கா சந்திக்கும் என ஈரான் தலைவர் காமேனி எச்சரித்து உள்ளார்.

இந்நிலையில், ரஷியாவின் முன்னாள் ஜனாதிபதியான டிமிட்ரி மெத்வதேவ், அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்பின் செயலால், இஸ்ரேல் தாக்குதலுக்கு ஆட்பட்டு உள்ளது. அந்நாட்டின் பல நகரங்களில் குண்டுவெடிப்பு சம்பவங்கள் நடக்கின்றன. மக்கள் அச்சத்தில் ஆழ்ந்துள்ளனர். எனினும், அமெரிக்க தாக்குதலில் ஈரானின் அரசு தப்பி விட்டது. எல்லா வகையிலும் அது முன்பை விட வலுவடைந்து உள்ளது என்றே கூறலாம்.

அந்நாட்டின் மத தலைவரிடம் இருந்து, இதற்கு முன்பு வேறுபட்டோ அல்லது எதிர்ப்பு தெரிவித்தோ இருந்தவர்கள் கூட தற்போது, ஆன்மீக தலைமையை தேடி ஓடும் நிலை காணப்படுகிறது. அமெரிக்காவை டிரம்ப், மற்றொரு போரில் தள்ளியுள்ளார். இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் நடவடிக்கைகளை உலகம் முழுவதும் உள்ள பெருமளவிலான நாடுகள் எதிர்க்கின்றன.

இந்த நிலையில், அமைதிக்கான நோபல் பரிசை டிரம்ப் மறந்து விட வேண்டியதுதான் என்று கூறி உங்களுக்கு வாழ்த்துகள் என்றும் கிண்டலாக அவர் தெரிவித்து உள்ளார்.

# மடாதிபதியுடன் ஒரே அறையில் தங்கிய தாய், மகள்: அடுத்து நடந்த பரபரப்பு



பெங்களூரு, ஜூன் 25

கர்நாடக மாநிலம் பெலகாவி மாவட்டம் மூடலகி தாலுகா சிவப்புரா கிராமத்தில் அடவி சித்தேஸ்வரா மடம் உள்ளது. இங்கு மடாதிபதியாக அடவி சித்தேஸ்வரா சாமியார் உள்ளார். கடந்த சில நாட்களாக மடத்தில் முறைகேடுகள் நடப்பதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இந்தநிலையில் சம்பவத்தன்று பாகல்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த ஒரு பெண் தனது 15 வயது மகளுடன் மடத்தில் வந்து தங்கி இருந்துள்ளார். அதாவது மடாதிபதியுடன் ஒரே அறையில் அந்த பெண், மகளுடன் தங்கியிருந்தார். இதுகுறித்து அப்பகுதி பொதுமக்களுக்கு தகவல் கிடைத்தது. இதனால் கோபம் அடைந்த அவர்கள், மடத்துக்குள் புகுந்து, அங்கிருந்த பெண் மற்றும் அவரது மகள் மீது சரமாரியாக தாக்குதல் நடத்தினர்.

அந்த பெண், சிறுமி, தங்களை விட்டுவிடும்படி கூறியும் அவர்கள் கேட்கவில்லை. ஆடைகளை பிடித்து

இழுத்ததுடன் கிழிக்க முயன்றனர். இதை பார்த்த மடாதிபதி

அடவி சித்தேஸ்வரா சாமியார் பொதுமக்களை தடுக்க முயன்றார். அப்போது அவர் மீதும் சில வாலிபர்கள் தாக்கினர். மேலும் மடத்தில் இருந்த சில பொருட்களையும் அடித்து, உடைத்தனர். இந்த சம்பவத்தால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இதுகுறித்து மூடலகி போலீசாருக்கு தகவல் கிடைத்தது. விரைந்து வந்த போலீசார் பெண் மற்றும் சிறுமியை மீட்டு, அறிவுரை கூறி அங்கிருந்து சொந்த ஊருக்கு அனுப்பி வைத்தனர். மேலும் மடாதிபதியை அங்கிருந்து பாதுகாப்பாக அனுப்பி வைத்தனர். பின்னர் தாக்குதலில் ஈடுபட்டவர்களிடம் போலீசார் சமாதான பேச்சு வார்த்தை நடத்தினர். அப்போது அவர்கள், பொது மக்களுக்கு நல்வழி காட்ட வேண்டிய மடாதிபதி, பெண்களுடன் நெருக்கமாக இருப்பது வேதனை அளிக்கிறது.

மேலும் சட்டவிரோத செயல்களும் நடக்கிறது. எனவே போலீசார் மடாதிபதி மீது நடவடிக்கை எடுப்பதுடன், மடத்துக்கும் சீல் வைக்க வேண்டும் என்று கூறினர். இதை கேட்ட போலீசார் விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தனர். இதனால் பொதுமக்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். மேலும் இதுகுறித்து மூடலகி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# பட்டர்ஃபிளை மாற்றத்தைக் கொண்டாடும் மற்றும் அசலானவர்களான உங்களை வென்றெடுக்கும் ஒரு துணிச்சலான புதிய அடையாளத்தை வெளிப்படுத்துகிறது

Butterfly

இந்தியாவின் மிகவும் நம்பகமான சமையலறை உபகரண பிராண்டுகளில் ஒன்றான பட்டர்ஃபிளை, ஒரு புதிய பக்கத்தைத் திருப்புகிறது. புதுப்பிக்கப்பட்ட பிராண்ட் அடையாளம், புதுப்பிக்கப்பட்ட நோக்கம் மற்றும் இன்றைய எப்போதும் வளர்ந்து வரும் நுகர்வோர் பற்றிய கூர்மையான புரிதலுடன். இந்தப் புதுப்பிப்பின் மையமாக காலத்திற்கு அப்பாற்பட்டவாறு, உருமாறிக்கொண்டிருக்கும் ஒரு சின்னம் உள்ளது; அதுவே ஃபிங்கர் பிரிண்ட் என்பதாகும்.

ஒரு பட்டர்ஃபிளையின் இறக்கைகளில் அழகாக ஒன்றிணைந்து, பரிணமித்த ஐகான் ஆனது பிராண்டின் முக்கிய நம்பிக்கையை பிரதிபலிக்கிறது: அது வாழ்க்கை மாறும் போது, ஒருவரின் சாராம்சம் அப்படியே இருக்கும் என்பதாகும். இந்த நிகழ்ச்சி குறித்து கூறியது பட்டர்ஃபிளையின் தலைமை வணிக அதிகாரி ஸ்வேதா சாகர்

பட்டர்ஃபிளையின் புதுப்பிக்கப்பட்ட நிலைப்பாடான, 'மாற்றத்தைக் கொண்டாடுதல்' என்பது, மாறி வரும் பொறுப்புகள், கலப்பின வாழ்க்கைமுறைகள் மற்றும் தொழில்நுட்பத்துடன் ஒருங்கிணைந்த வாழ்க்கை ஆகியவை விதிமுறையாக இருக்கும் நவீன இந்திய வீடுகளைப் பற்றிய ஆழமான புரிதலைப் பிரதிபலிக்கிறது.

வீட்டுத் தேவைக்கான தீர்வுகளில் இந்தியாவின் முன்னணி பெயர்களில் ஒன்றான குரோம்ப்டனின் துணை நிறுவனமாக, பட்டர்ஃபிளை ஆனது இப்போது சமையலறையிலும் அதற்கு அப்பாலும் அன்றாட அனுபவங்களை உருமாற்றும் உள்ளார்ந்த மற்றும் நோக்கத்துடனான புத்தாக்கங்களைக் கொண்டுவரத் தயாராக உள்ளது. “40 ஆண்டுகளுக்கும் மேலாக, பட்டர்ஃபிளை இந்தியா முழுவதும் உள்ள கோடிக் கணக்கான சமையலறைகளில் ஒரு பகுதியாக இருந்து வருகிறது.

இன்று, வீடுகள் அதிக ஃப்ளுயிட் ஆகவும் மற்றும் அடையாளங்கள் அதிக சுயமாக வரையறுக்கப்பட்டதாகவும் மாறும்போது, எங்கள் புதிய அடையாளமானது நாம் யார் என்பதை மட்டுமல்ல நாம் யாருக்காக இங்கே இருக்கிறோம் என்பதையும் பிரதிபலிக்கிறது,”என்று கூறினார்.

# திருப்பூர் மாவட்ட ஆட்சியர் மாற்றம்



திருப்பூர் மாவட்ட மாவட்ட ஆட்சியராக இருந்த து.கிருஸ்துராஜ் ஐ ஏ எஸ் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டு கழக இயக்குநராக பணியிட மாற்றம் செய்யப்பட்டு தற்போது ஈரோடு மாநகராட்சி முன்னாள் ஆணையர் நாரணவரே மனிஷ் ஷங்கர்ராவ் ஐ ஏ எஸ், திருப்பூர்மாவட்ட ஆட்சியராகதமிழ்நாடுஅரசுநியமனம் செய்து உள்ளது.






# ஆன்லைன் வர்த்தக மோசடியில் பணத்தை சுருட்டும் கும்பல் குவியும் புகார்கள்



சென்னை, ஜூன் 25

கடந்த சில ஆண்டுகளாக வணிகத்தின் மீது பலருக்கும் ஆர்வம் அதிகரித்து வருகிறது. அதிலும் பலரின் கனவு ஆன்லைன் வர்த்தகமாக உள்ளது. அரசு அல்லது தனியார் நிறுவனத்தில் வேலை செய்து கொண்டே யாருக்கும் தெரியாமல் ஆன்லைன் வர்த்தகத்தில் ஈடுபடலாம்.

இதன்மூலம் ஒரே நேரத்தில் இரண்டு வருமானம் பெற்று, குடும்பத்தை வசதியாகவைத்து கொள்ளலாம் என்பது பலரின் ஆசையாக இருக்கிறது. இத்தகைய ஆசையோடு முன்னேற துடிக்கும் ஆட்கள் எளிதாக மோசடி வலையில் விழுந்து ஏமாறுவது அதிகரிக்கிறது. இந்த மோசடியில் படித்தவர்கள், படிக்காதவர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் அனைவரும் சிக்கிக்கொள்கின்றனர்.

இதற்காக முகநூல், இன்ஸ்டாகிராம், எக்ஸ் தளம், யூடியூப் ஆகியவற்றில் 'ஆன்லைன் வர்த்தகத்தில் அதிக பணம் சம்பாதிக்கலாம், பயிற்சிகள் அளிக்கப்படும், விருப்பம் உள்ளவர்கள் வாட்ஸ் அப்பில் தொடர்பு கொள்ளலாம்' என்று கவர்ச்சிகரமாக விளம்பரம் செய்கின்றனர். ஏற்கனவே ஆன்லைன் வர்த்தக ஆர்வத்தில் இருப்பவர்கள், வாட்ஸ் அப் மூலம் தொடர்பு கொள்கின்றனர்.


இதையடுத்து அவர்களுக்கு, வாட்ஸ்அப் மூலமாக பயிற்சி அளிக்கப்படுகிறது. பின்னர் சிறிய தொகையை முதலீடு செய்யும்படி ஒரு வங்கி கணக்கும் கொடுக்கப்படுகிறது. அதில் ரூ.1,000 முதலீடு செய்தால், அடுத்த சில நாட்களில் அது ரூ.1,200 ஆக திரும்ப கிடைக்கும். அதையடுத்து தொகையை சிறிது, சிறிதாக உயர்த்தி லட்சக்கணக்கில் முதலீடு செய்யும்படி ஆசையை தூண்டுகின்றனர்.

அதை நம்பி லட்சக்கணக்கில் பணம் முதலீடு செய்ததும், அதுவும் பல மடங்கு உயரும். ஆனால் பணத்தை திரும்ப எடுக்க முடியாது. அதுபற்றி வாட்ஸ்அப் மூலம் கேட்டால், மேலும் முதலீடு செய்யுங்கள் என்று கூறிக் கொண்டே இருப்பார்கள். எத்தனை முறை, எவ்வளவு தொகை முதலீடு செய்தாலும், அதை திரும்ப பெற முடியாது. ஒருகட்டத்தில் வாட்ஸ்அப் மூலமாகவும் விளக்கம் கேட்கமுடியாமல் போய்விடுகிறது. அதன்பின்னரே மோசடி செய்யப்பட்டதை உணர்ந்து புலம்புகின்றனர். குறுகிய காலத்தில் அதிக பணத்தை சம்பாதிக்கும் ஆசையில் சிறுக, சிறுக சேமித்த பணத்தை இழந்து தவிக்கின்றனர். இறுதியில் சைபர் கிரைம் போலீசில் புகார் கொடுத்துவிட்டு பணம் திரும்ப கிடைக்குமா? என்று காத்திருக்கின்றனர்.

அந்த வகையில், திண்டுக்கல் சைபர் கிரைம் போலீசில் ஆன்லைன் வர்த்தக மோசடி குறித்து புகார்கள் குவிந்து வருகின்றன. அதன்படி 100க்கும் மேற்பட்ட புகார்கள் வந்து இருப்பதாக போலீசார் கூறுகின்றனர். இதில் பட்டதாரிகள், என்ஜினீயர்கள், ஐ.டி. ஊழியர்கள் என அனைவரும் ஏமாந்து இருக்கின்றனர். குறைந்தபட்சம் ரூ.20 ஆயிரம் முதல் அதிகபட்சமாக ரூ.50 லட்சம் வரை பணத்தை இழந்து உள்ளனர்.

அந்தவகையில் மாவட்டத்தில் மட்டும் ரூ.15 கோடி அளவுக்கு ஆன்லைன் வர்த்தக மோசடியில் பணத்தை இழந்து உள்ளனர். இதுதொடர்பாக சைபர்கிரைம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இது தொடர்பாக ஒருசிலர் கைது செய்யப்பட்டாலும், பணத்தை மீட்பது பெரும் சவாலாக உள்ளது.

# கொத்தனாருடன் விடுதி அறையில் தங்கிய பெண்: அடுத்து நடந்த பரபரப்பு



தேனி, ஜூன் 26

தேனி அருகே ஒரு கிராமத்தை சேர்ந்த 38 வயது பெண் கட்டுமான தொழிலாளியாக வேலை பார்த்து வருகிறார். அவருக்கு திருமணம் ஆகிவிட்டது. இந்தநிலையில், அவர் கட்டிட வேலைக்கு சென்றபோது வெளியூரை சேர்ந்த கொத்தனார் ஒருவருடன் பழக்கம் ஏற்பட்டது. இருவரும் நெருங்கி பழகி வந்தனர்.

சில மாதங்களுக்கு முன்பு விருதுநகரில் நடந்த உறவினர் வீட்டு விழாவுக்கு அந்த பெண்ணும், கொத்தனாரும் ஒன்றாக சென்றனர். அங்கு அவர்கள் ஒரு விடுதியில் அறை எடுத்து தங்கினர். இந்த விவரத்தை எப்படியோ அந்த பெண்ணின் பக்கத்து வீட்டில் வசிக்கும் 40 வயது பெண் தெரிந்து கொண்டார். அந்த பெண் தொழிலாளியை சந்தித்த, பக்கத்து வீட்டு பெண், 'நீயும் கொத்தனாரும் விடுதியில் ஒன்றாக இருந்த வீடியோ சி.டி. என்னிடம் உள்ளது. அதை கொத்தனாரின் மனைவியிடம் கொடுக்கப் போகிறேன்' என்றார்.

அதைக்கேட்டு அவர் அதிர்ச்சி அடைந்தார். இந்த விஷயம் வெளியே தெரிந்தால் தனக்கு மிகப் பெரிய அவமானம் ஏற்படும் என்று கருதினார். இதனால் சி.டி.யை யாரிடமும் கொடுக்காதீர்கள் என்று கெஞ்சினார். அதற்கு ரூ.10 லட்சம் கொடுத்தால் சி.டி.யை கொடுக்காமல் இருப்பேன் என்று மிரட்டினார். இதையடுத்து அவர் தனது பக்கத்து வீட்டு பெண்ணிடம் 7 பவுன் நகைகள் மற்றும் ரூ.2 லட்சத்தை கொடுத்தார்.

இந்தநிலையில் அவர் பணம் கேட்டு மீண்டும் மிரட்டினார்.

அவர்தன்னிடம் பணம் இல்லை என்று சொன்னதால், அவருடைய நிலத்தை விற்று கொடுக்குமாறு மிரட்டினார். இதற்கிடையே பக்கத்து விட்டு பெண்ணிடம் அதுபோல் சி.டி. எதுவும் இல்லை என்றும், அவர் பொய்யான தகவலை சொல்லி மிரட்டி பணம், நகை பறித்ததாகவும் தெரியவந்தது. அதனால் அவர் கொடுத்த பணம், நகைகளை திரும்ப கேட்டார்.

அப்போது பக்கத்து வீட்டு பெண்ணும், அவருடைய மகனும் சேர்ந்து அவருக்கு கொலை மிரட்டல் விடுத்தனர். இதுகுறித்து பழனிசெட்டிபட்டி போலீஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட பெண் புகார் கொடுத்தார். அதன் பேரில் மிரட்டி பணம் நகைகள் பறித்த பெண் மற்றும் அவருடைய மகன் ஆகிய 2 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து அவர்களை தேடி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# குளிப்பதற்காக ஹீட்டர் மூலம் தண்ணீரை சூடாக்கியபோது மின்சாரம் தாக்கி பள்ளி மாணவன் சாவு



நீலகிரி ஜூன் 26

நீலகிரி மாவட்டம் ஊட்டி அடுத்த புதுமந்து ஓடைக்காடு பகுதியை சேர்ந்தவர் ஜெகதீசன் (வயது 41). இவர் கால்நடைகள் வளர்த்து வருவதோடு, விவசாயம் செய்து வருகிறார். இவருக்கு திருமணமாகி 2 மகன்கள் உள்ளனர். மூத்த மகன் சுனித் (10 வயது) தனியார் பள்ளியில் 6ம் வகுப்பு படித்து வந்தான்.

இந்த நிலையில் நேற்று சுனித்தின் தாய் வீட்டில் குளிப்பதற்காக வாளியில் தண்ணீர் வைத்து வாட்டர் ஹீட்டரை போட்டுவிட்டு, கால்நடைகளுக்கு தீவனம் வைப்பதற்காக சென்றுவிட்டார். தண்ணீர் சூடாகி விட்டதா என சிறுவன் சுனித் கை வைத்து பார்த்துள்ளான். அப்போது எதிர்பாராத விதமாக வாட்டர் ஹீட்டரில் இருந்து மின்சாரம் பாய்ந்ததில் சிறுவன் தூக்கி வீசப்பட்டான்.

இதையடுத்து சுனித்தின் அலறல் சத்தம் கேட்டு வந்த உறவினர்கள், சிறுவனை மீட்டு ஊட்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு சிறுவனை பரிசோதித்த மருத்துவர்கள், ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர்.

இதுகுறித்து புதுமந்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மின்சாரம் தாக்கி பள்ளி மாணவன் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# தி.மு.க.வில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இரு அணிகளுக்கு நிர்வாகிகள் நியமனம்




சென்னை ஜூன் 26

மதுரையில் கடந்த 1ந்தேதி நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுவில் தி.மு.க. சட்ட விதியின்படி, கல்வியாளர் அணி மற்றும் மாற்றுத்திறனாளிகள் அணி உருவாக்கப்படுவதாக அக்கட்சியின் தலைவரும், முதல் அமைச்சருமான மு.க. ஸ்டாலின் அறிவித்தார்.

இந்த நிலையில் தி.மு.க.வில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இரண்டு அணிகளுக்கு நிர்வாகிகளை நியமித்து தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

அதன்படி கல்வியாளர் அணியின் தலைவராக புலவர் ந.செந்தலை கவுதமனும், செயலாளராக தமிழச்சி தங்கப்பாண்டியனும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மாற்றுத்திறனாளிகள் அணியின் தலைவராக ரெ.தங்கமும், செயலாளராக பேராசிரியர் டி.எம்.என்.தீபக்கும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

# சென்னையில் த.வெ.க.வினர் மீது 53 பேர் மீது வழக்குப்பதிவு




சென்னை, ஜூன் 25

தமிழக வெற்றி கழக தலைவரும், நடிகருமான விஜய் தனது 51வது பிறந்த நாளை நேற்று கொண்டாடினார். அவருடைய பிறந்த நாளை அவரது கட்சி தொண்டர்களும், நிர்வாகிகளும் சீரும், சிறப்புமாக கொண்டாடி மகிழ்ந்தனர். விஜய்யை வாழ்த்தி தமிழகம் முழுவதும் பல்வேறு பகுதிகளில் பேனர்கள் வைத்தனர். பேனர் வைப்பதில் சில இடங்களில் தகராறும் ஏற்பட்டது. ஆளுங்கட்சியான தி.மு.க.வினரால் த.வெ.க.வினர் தாக்கப்பட்ட சம்பவங்களும் அரங்கேறின.

உரிய அனுமதி இல்லாமல் பேனர் வைக்கப்பட்ட இடங்களை போலீசார் ஆய்வு செய்து பேனர்களை அகற்றும் முயற்சியில் ஈடுபட்டனர். அப்போது போலீசாருக்கும், த.வெ.க.வினருக்கும் வாக்குவாதம் சம்பவங்களும் ஆங்காங்கே நடைபெற்றது. இந்த நிலையில் விஜய் பிறந்தநாளையொட்டி அனுமதி இன்றி எங்கெங்கு பேனர்கள் வைக்கப்பட்டது என்ற பட்டியலை போலீசார் சேகரித்துள்ளனர். அந்த பேனரை வைத்து நிர்வாகி மீது வழக்குப்பதிவு நடவடிக்கையை போலீசார் எடுத்துள்ளனர்.

அந்த வகையில் சென்னையில் அனுமதி இன்றி பேனர்கள் வைத்து தொடர்பாக 53 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# சென்னையில் 2வது கட்டமாக 600 மின்சார பஸ்கள்



சென்னை, ஜூன் 25

சென்னை மாநகர போக்குவரத்துக் கழகமானது காற்று மாசுப்பாட்டை கட்டுப்படுத்துவதுடன் மக்களுக்கான சொகுசு வசதிகளை அதிகரிக்கும் நோக்கில் மின்சார பஸ்களை இயக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன்படி, 1225 மின்சார பஸ்களை மொத்த விலை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இயக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

அதில், முதல்கட்டமாக 625 மின்சாரதாழ்தளபஸ்கள் வியாசர்பாடி, பெரும்பாக்கம், சென்டிரல், தண்டையார் பேட்டை, பூந்தமல்லி ஆகிய 5 பணிமனைகள் மூலம் மொத்த விலை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இயக்குவதற்கான ஒப்பந்தங்கள் நிறைவு செய்யப்பட்டு அசோக் லேலண்ட் நிறுவனத்தின் துணை நிறுவனமான ஓம் குளோபல் மொபிலிட்டி நிறுவனத்தின் சார்பில், 400 ஏ.சி. அல்லாத பஸ்களும், 225 ஏ.சி. பஸ்களும் இயக்கப்பட உள்ளன.

அதே நேரத்தில், 2வது கட்டமாக 600 மின்சார தாழ்தள பஸ்களுக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில், 400 ஏ.சி. பஸ்களும், 200 ஏ.சி. அல்லாத பஸ்களும் அடங்கும். இந்த ஒப்பந்தத்தில், ஏற்கனவே முதல் கட்ட ஒப்பந்தத்தை கைப்பற்றி உள்ள ஓம் குளோபல் மொபிலிட்டி நிறுவனம் மற்றும் ஈவி டிரான்ஸ், ஈகிள் கன்ஸ்டிரக்ஷன், டிராவல்டைம் மொபிலிட்டி இந்தியா என்ற 4 நிறுவனங்கள் பங்கேற்று உள்ளன. இந்த ஒப்பந்தத்தை நிறைவு செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த ஒப்பந்தமானது ஆகஸ்டு மாதத்திற்குள் இறுதி செய்யப்படும் என்று சென்னை மாநகர போக்குவரத்துக் கழக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# நடிகர் ஸ்ரீகாந்துக்கு ஜூலை 7ம் தேதி வரை நீதிமன்ற காவல்



சென்னை, ஜூன் 25

சென்னை நுங்கம்பாக்கம் பகுதியில் 'கொகைன்' போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டதாக சேலம் மாவட்டம் சங்ககிரியை சேர்ந்த பிரதீப்குமார் (வயது 38) என்பவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், அவருக்கு 'கொகைன்' சப்ளை செய்ததாக ஆப்பிரிக்க நாடான கயானாவை சேர்ந்த ஜான் (38) என்பவர் ஓசூரில் கைது செய்யப்பட்டார்.

இதனைத்தொடர்ந்து ஜான் சென்னைக்கு அழைத்துவரப்பட்டு போலீசார் விசாரணையில் ஈடுபட்டனர். அப்போது அவர் யாருக்கெல்லாம் போதைப்பொருளை சப்ளை செய்தார்? என்ற பட்டியலை போலீசாரிடம் கொடுத்தார். அந்த பட்டியலில் தமிழ் சினிமாவின் பிரபல நடிகரான ஸ்ரீகாந்தும் இடம் பெற்றிருந்தார். இதையடுத்து போலீசார் நேற்று ஸ்ரீகாந்தை நுங்கம்பாக்கம் காவல் நிலையத்துக்கு வரவழைத்து அதிரடி விசாரணையில் ஈடுபட்டனர்.

போலீசாரின் விசாரணையின்போது, தான் போதைப்பொருளை பயன்படுத்தியதே இல்லை என்று ஸ்ரீகாந்த் வாதம் செய்தார். ஆனால் அவருக்கு அடிக்கடி போதைப்பொருள் சப்ளை செய்ததாக ஜான் குறிப்பிட்டிருந்தது போலீசாருக்கு சந்தேகத்தை வரவழைத்தது.

இதையடுத்து சாலிகிராமத்தில் உள்ள ஸ்ரீகாந்தின் வீட்டில் போலீசார் சோதனை நடத்தினர். இதில் எதுவும் சிக்கவில்லை. இதையடுத்து ஸ்ரீகாந்தின் ரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. பரிசோதனை முடிவில், ஸ்ரீகாந்த் 'கொகைன்' போதைப் பொருளை பயன்படுத்தி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. போதைப் பொருள்பயன்படுத்தி 45 நாட்கள் வரை மருத்துவ பரிசோதனையில் கண்டறியலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து நுங்கம்பாக்கம் போலீசார் ஸ்ரீகாந்தை கைது செய்தனர். இந்த விவகாரத்தில் ஸ்ரீகாந்த் வேறு யாருக்காவது போதைப்பொருளை வழங்கியுள்ளாரா? என்பது குறித்தும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் ஸ்ரீகாந்த் ஆன்லைன் மூலமாகவும், சில சமயங்களில் நேரடியாகவும் போதைப்பொருளை வாங்கியிருப்பது தெரியவந்துள்ளது. இந்த வழக்கு குறித்து போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறார்கள். இந்த நிலையில், போதைப்பொருள் வழக்கில் கைதான நடிகர் ஸ்ரீகாந்துக்கு ஜூலை 7ம் தேதி வரை நீதிமன்ற காவல் விதிக்கப்பட்டுள்ளது. மேலும் ஸ்ரீகாந்தை முதல் வகுப்பு சிறையில் அடைக்க நீதிபதி ஒப்புதல் அளித்துள்ளார். அதன்படி அவர் முதல் வகுப்பு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

# சாலையோரம் நின்ற வாகனம் மீது டிப்பர் லாரி மோதி விபத்து



திருவள்ளூர், ஜூன் 26

திருத்தணி அடுத்த பொன்பாடி சோதனை சாவடி அருகே நேற்று முன்தினம் இரவு கனரக லாரி ஒன்று சாலையோரம் நிறுத்தப்பட்டிருந்தது. நேற்று அதிகாலை 4 மணிக்கு ஆந்திர மாநிலம் நகரி பகுதியில் இருந்து திருத்தணி நோக்கி வந்த டிப்பர் லாரி தமிழக எல்லையில் அமைந்துள்ள பொன்பாடி சோதனை சாவடி அருகே வந்த போது டிரைவர் கட்டுப்பாட்டை இழந்து சாலையோரம் நின்றிருந்த வாகனம் மீது மோதியது.

இதில் லாரியின் முன்பகுதி முற்றிலும் சேதம் அடைந்தது. டிப்பர் லாரி டிரைவரான கடலூர் மாவட்டம் டி.புதுப்பாளையம் பகுதியை சேர்ந்த அருள் (வயது 40) என்பவர் இரு லாரிகளின் இடிபாடுகளுக்குள் சிக்கிக் கொண்டு வெளியே வர முடியாமல் 2 மணி நேரம் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தார்.

தகவல் அறிந்ததும் சோதனை சாவடியில் இருந்த போலீசார், சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீயணைப்பு வீரர்கள் உதவியுடன் லாரியில் சிக்கியிருந்த டிரைவர் அருளை மீட்டனர். பின்னர் படுகாயம் அடைந்த அருள் திருத்தணி அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

# யானை தந்தம் விற்க முயன்ற 4 பேர் கைது



கிருஷ்ணகிரி, ஜூன்

கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி, குந்தாரப்பள்ளி பகுதிகளில் சிலர் யானை தந்தங்களை விற்க முயற்சி செய்வதாக கிருஷ்ணகிரி வனத்துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அவர்களை செல்போனில் தொடர்பு கொண்ட வனத்துறையினர், அவர்களிடம் தந்தம் வாங்குபவர்கள் போல் பேசி குந்தாரப்பள்ளிக்கு வருமாறு கூறினார்கள். கிருஷ்ணகிரி வனச்சரகர் முனியப்பன் தலைமையில், வனவர்கள் சிவக்குமார், முருகேசன், வனக்காப்பாளர்கள் ஜோதிவிக்னேஷ், மணிகண்டன் ஆகியோர் அடங்கிய குழுவினர் நேற்று குந்தாரப்பள்ளியில் நின்று கொண்டிருந்தனர். அந்த நேரம் 3 மோட்டார்சைக்கிள்களில் வந்த 4 பேரை மடக்கி பிடித்தனர். விசாரணையில் அவர்கள் சூளகிரியை சேர்ந்த நரசிம்மன் (வயது 40), பழையபேட்டை நந்தகுமார் கட்டிகானப்பள்ளி பால் அந்தோணி ராஜ் (63), சூளகிரியை சேர்ந்த மற்றொரு நரசிம்மன் (32) என தெரிய வந்தது. அவர்கள் கர்நாடக மாநில வனப்பகுதியில் இருந்து உடைந்த தந்த துண்டுகளை எடுத்து வந்ததாகவும், அதை அதிக விலைக்கு விற்கலாம் என முயற்சி செய்ததாகவும் தெரிவித்தனர். அவர்களிடமிருந்து 400 கிராம் அளவிலான சிறிய 2 உடைந்த தந்தங்களுடன், மோட்டார்சைக்கிள்களையும் பறிமுதல் செய்த வனத்துறையினர், 4 பேரையும் கைது செய்தனர்.

# டெல்லி- சென்னை செல்லும் 2 ஏர் இந்தியா விமானங்கள் ரத்து

சென்னை, ஜூன் 26

குஜராத் மாநிலம் ஆமதாபாத் விமான நிலையத்தில் இருந்து கடந்த 12ந் தேதி இங்கிலாந்து நாட்டில் உள்ள லண்டன் நகருக்கு ஏர்இந்தியா விமானம் புறப்பட்டது. இந்த விமானம் புறப்பட்ட சில நிமிடங்களுக்குள் கீழே விழுந்து வெடித்து சிதறியது.

இந்த கோர விபத்தில் குஜராத் முன்னாள் முதல் மந்திரி விஜய் ரூபானி உள்பட 270 பேர் பலியாகினர். விமானத்தில் இருந்த ஒரே ஒருவர் மட்டும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

இந்த விபத்து காரணமாகவிமானத்தில்செல்ல பலருக்கும் அச்சம் ஏற்பட்டுள்ளது. இந்த அகமதாபாத் விமான விபத்தால் பயணிகளின் வருகை குறைந்தது. இந்த நிலையில் டெல்லி சென்னைவழித்தடத்தில் 2 ஏர் இந்தியா விமானங்களின் சேவை ரத்து செய்யப்பட்டுள்ளது.

# திடீரென தீப்பற்றி எரிந்த பைக் சென்னையில் பரபரப்பு



சென்னை, ஜூன் 26

சென்னை பட்டினப்பாக்கம் அருகே பைக்கில் ஒருவர் சென்று கொண்டிருந்தார். அப்போது பைக்கில் இருந்து புகை வெளியேறியது. இதனைக்கண்ட நபர் அவசர அவசரமாக பைக்கை சாலையில் நிறுத்திவிட்டு தப்பினார். இதனையடுத்து பைக் மளமளவென தீப்பற்றி எரிந்தது.

இது குறித்து தீயணைப்புத்துறையினருக்குதகவல்கொடுக்கப்பட்டது. தகவலறிந்த தீயணைப்புத்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். எரிந்து கொண்டிருந்த தீயை அணைத்து அந்த வாகனத்தை அப்புறப்படுத்தினர்.

இந்த சம்பவத்தால் பட்டினப்பாக்கம் சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# முருக பக்தர்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஏற்கவில்லை அ.தி.மு.க.



ன்னை, ஜூன் 25

முருக பக்தர்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையோ, உறுதிமொழிகளையோ அ.தி.மு.க.வைச் சேர்ந்த யாரும் ஏற்கவில்லை என்று அ.தி.மு.க. தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக அ.தி.மு.க. ஐ.டி. விங் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

அவலமே உருவான ஒரு ஆட்சியை நடத்தும் ஸ்டாலினின் தி.மு.க., அதைப்பற்றி நாங்கள் நாள்தோறும் தெரிவிக்கும் மக்களின் குரலான விமர்சனங்ககளுக்கு பதில் சொல்ல வக்கில்லாமல், "Take Diversion" என்ற தனது வழக்கமான பாணியில், முருக பக்தர்கள் மாநாட்டை வைத்து, அ.இ.அ.தி.மு.க. மீது அவதூறான கருத்துகளை அள்ளித் தெளித்து, மக்களின் கவனத்தை திசைதிருப்பிவிடலாம் என எண்ணுகிறது.

தி.மு.க.வின் அமைச்சர்கள் வரிசையாக செய்தியாளர் சந்திப்பு கொடுக்க, ஆர்.எஸ்.பாரதி பெயரில் வழக்கம் போலவே அறிக்கை வாந்தியையும் கக்கியுள்ளது தி.மு.க. "திராவிடத்தை அழிக்க முருகா வா" என்று ஒட்டப்பட்ட போஸ்டர்களால் திராவிடம் அழிந்துவிடுமா? திராவிடம் என்ற கொள்கையைத் தான் யாராவது அழித்துவிட முடியுமா?

திராவிடம் என்பது எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையிலான, ஏழை எளிய மக்கள் ஏற்றம் பெற வேண்டும் என்ற நோக்கில் தமிழ்நாட்டை செலுத்திக் கொண்டிருக்கும் உயரிய கொள்கை நெறி! மக்களுக்கான ஒரு கொள்கையை யாரால் வீழ்த்த முடியும்? தி.மு.க.வின்

இந்த விஷமப் பிரச்சாரம், நம் திராவிடக் கொள்கையையே Insecureஆக காட்டக்கூடிய ஒரு மோசமான Narrative. இதை செய்வதற்கு தி.மு.க. வெட்கித் தலைகுனிய வேண்டும்.

அரசியல் செய்கிறோம் என்ற பெயரில் திராவிடத்தை வலுவற்ற கொள்கை போல கட்டமைக்க முயலும் தி.மு.க.வின் சதிச்செயல் கடும் கண்டனத்திற்குரியது. பெரியார், அண்ணாவின் வாழ்வியல் உரத்தில் தழைத்தோங்கி நிற்கும் கொள்கையை, ஒரு மாநாடு சிதைத்து விடுமாஎன்ன? இல்லை, அப்படி நடக்கத்தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் விட்டுவிடுமா?

திராவிடக் கொள்கை எங்கள் குருதியில் கலந்த ஒன்று. "ஒன்றே குலம்; ஒருவனே தேவன்" என்ற பேரறிஞர் அண்ணாவின் நெறிப்படி வாழ்பவர்கள் நாங்கள். ஒவ்வொருவருடைய தனிப்பட்ட கடவுள் நம்பிக்கைக்கும் மதிப்பளிக்கக் கூடிய இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பதால்தான், கடவுள் பக்தியை பறைசாற்ற, அமைப்பு ரீதியாக நடத்தப்பட்ட மாநாட்டிற்கு கழகப் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஜனநாயக ரீதியாக வாழ்த்து தெரிவித்தார்.

ங்கள் இயக்கத்தைச் சேர்ந்த நிர்வாகிகளும், தனிப்பட்ட முறையில் முருக பக்தர்கள் என்ற அடிப்படையிலேயே அந்த மாநாட்டில் கலந்துகொண்டனரே தவிர எந்த வித அரசியல் நோக்கத்திலும் அல்ல. அந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையோ, உறுதிமொழிகளையோ அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த யாரும் ஏற்கவில்லை என்பதை திட்டவட்டமாக தெரிவித்துக்கொள்ள விழைகிறேன்.

தே போல், அந்த மாநாட்டில், தந்தைப் பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் பற்றி வெளியிடப்பட்ட வீடியோ என்பது துளியும் ஏற்றுக்கொள்ள முடியாதது. அதற்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தரப்பி

ல் எங்கள் கடுமையான கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறோம். உண்மையில் அப்படிப்பட்ட வீடியோ வெளியிட்டதாக எங்கள் கவனத்திற்கு வரவோ, நாங்கள் யாரும் பார்க்கவோ இல்லை. மாநாடு முடித்து வந்த பிறகே இதுபற்றிய செய்திகள் வாயிலாகத்தான் நாங்களும் அறிந்து கொண்டோம்.

சாதியின் பெயரால் மக்கள் பிரிவுண்டு இருக்க, அந்த சாதிக்கு மூலமாக கடவுளை வைத்து சிலர் அரசியல் செய்ய, அந்த அரசியலை எதிர்க்கவே "கடவுள் மறுப்பு" கொள்கையை ஆயுதமாக ஏந்தினார் தந்தைப் பெரியார். பெரியாரின் கோபம் எப்போதும் கடவுள் மீது அல்ல; மாறாக, கடவுளின் பெயரைச் சொல்லி சிலரின் தவறான அரசியலால் ஏற்பட்ட கொடும் சாதிய பேதங்கள் மீது தான்!

" நான் பிள்ளையாரையும் உடைக்க மாட்டேன்; பிள்ளையாருக்கு தேங்காயும் உடைக்கமாட்டேன்" என அரசையும் மதத்தையும் தெளிவாக வேறுபடுத்தி, Secularist அரசியலை முன்னெடுத்தவர், நாங்கள் பெயரில் மட்டுமல்ல, எங்கள் நெஞ்சங்களிலும் தாங்கும் பேரறிஞர் அண்ணா.

பெரியார், அண்ணா ஆகியோரின் கொள்கைப் பார்வையைத் தன்னகத்தே கொண்டு, வழுவாமல் இயங்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, அவதூறும் ஆபாசமும் மட்டுமே கொள்கையாகக் கொண்ட தி.மு.க. பாடமெடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

அதேபோல், கழகத்தின் தலைமை நிலையச் செயலாளர், முன்னாள் அமைச்சர் எஸ்.பி. வேலுமணி, தனது தொகுதிக்கு உட்பட்ட மிகவும் பழமைவாய்ந்த, மதிப்பிற்குரிய பேரூர் ஆதீனத்தின் நூற்றாண்டு விழாவையொட்டி அளிக்கப்பட்ட அழைப்பினை ஏற்று கலந்துகொண்டதாகவும், ஆர்.எஸ்.எஸ் விழாவில் கலந்துகொள்ளவில்லை எனவும் செய்தியாளர் சந்திப்பில் தெளிவுபடுத்திவிட்டார்.

பாரதிய ஜனதா கட்சியை மையமாகக் கொண்டு இன்றைக்கு இவ்வளவு பேசும் தி.மு.க, 19992004 வரை என்ன செய்து கொண்டிருந்தது? முரசொலி மாறனின் மத்திய மந்திரி பதவியை தக்க வைத்துக்கொள்ள பா.ஜ.க.வின் காலடிகளைத் தேடி சென்ற கொத்தடிமைகளான தி.மு.க.விற்கு அப்போது மட்டும் இனித்ததா?

எந்த கட்சியை எதிர்த்து தங்கள் கட்சி அரசியலுக்கு வந்ததோ, அந்த காங்கிரஸ் கட்சியோடே கூட்டணி வைத்துக் கொண்டு, வரலாறு நெடுக தமிழர்களுக்கு துரோகம் இழைத்த தி.மு.க, துரோகத்தைப் பற்றி பேசுவதா? அ.இ.அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணி என்பது தமிழ்நாட்டின் வளர்ச்சியை கருத்திற்கொண்டு அமைக்கப்பட்ட கூட்டணி. அதில் மாற்றுக் கருத்தில்லை.

ஆனால், மிக உறுதியாக சொல்கிறோம் எங்களுடைய கொள்கை நிலைப்பாடுகளை எக்காரணம் கொண்டும் விட்டுக்கொடுக்கின்ற இயக்கமல்ல அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்! தமிழ்நாட்டிற்கு ஒன்று என்றால், நம் மாநில மக்களுக்கு ஒன்று என்றால், கொண்ட கொள்கையாம் திராவிடத்திற்கு ஒன்று என்றால், ரத்தத்தில் கலந்துள்ள நம் தலைவர்களுக்கு ஒன்று என்றால், கொழுந்துவிட்டு பற்றி எரியும் தீ அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டன்!

தமிழ்நாட்டிற்கு உண்மையில் துரோகம் இழைத்துக் கொண்டிருப்பது தி.மு.க.தான் என்பதை மக்கள் அறிவார்கள். அதை 2026ல் மக்கள் உங்களை விரட்டி அடிக்கும்போது புரியும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.தி.மு.க.தான் என்பதை மக்கள் அறிவார்கள். அதை 2026 ல் மக்கள் உங்களை விரட்டி அடிக்கும்போது புரியும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காதல் தோல்வியால் தற்கொலைக்கு முயன்ற இளம்பெண் சாதுர்யமாக பேசி காப்பாற்றிய பெண் காவல் உதவி ஆய்வாளர்

சென்னை, ஜூன் 25

சென்னை மாம்பலத்தில் காதல் தோல்வியால் 4வது மாடியில் இருந்து குதிக்க முயன்ற பெண்ணை சாதுர்யமாக பேசி காப்பாற்றிய பெண் காவல் உதவி ஆய்வாளருக்கு பாராட்டுகள் குவிந்து வருகிறது.

27 வயது இளம்பெண் ஒருவர் காதல் தோல்வி காரணமாக தற்கொலை செய்து கொள்வதற்காக கைகளை அறுத்துக் கொண்டு 4வது மாடியிலிருந்து குதிக்க முயன்றார். தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு வந்த தீயணைப்புத்துறையினர் கீழ்த்தளத்திலிருந்து அந்த பெண்ணை காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் அந்த இளம்பெண்ணை செல்போனில் தொடர்பு கொண்ட காவல் உதவி ஆய்வாளர் மீரா, அந்த பெண்ணுக்கு ஆறுதல் கூறிக்கொண்டே வீட்டின் கதவை உடைத்து உள்ளே சென்றார். பின்னர் ஜன்னல் வழியாக கீழே குதிப்பதற்காக அமர்ந்திருந்த அந்த பெண்ணை மீரா காப்பாற்றினார். இதையடுத்து அந்த பெண் முதலுதவி சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். தற்கொலைக்கு முயன்ற இளம்பெண்ணை சாதுர்யமாக பேசி காப்பாற்றிய காவல் உதவி ஆய்வாளர் மீராவுக்கு உயர் அதிகாரிகள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.



# தைலாபுரம் தோட்ட சுவரில் ஒட்டப்பட்டு இருந்த அன்புமணி போஸ்டர்கள் அகற்றம்

விழுப்புரம் ஜூன்25

பாமக நிறுவனர் டாக்டர் ராமதாசுக்கும், அன்புமணி ராமதாசுக்கு இடையே கடந்த சில வாரங்களாக கருத்து மோதல் நடந்து வருகிறது. இதுஒருபுறம் இருக்க டாக்டர் ராமதாஸ் கட்சியில் சரியாக செயல்படாதவர்களையும், டாக்டர் அன்புமணி ராமதாசின் ஆதரவாளர்களையும் கட்சியில் இருந்து நீக்கி புதிய பொறுப்பாளர்களை நியமனம் செய்து வருகிறார். மேலும், தனது மூச்சு அடங்கும் வரை அன்புமணிக்கு பாமக தலைவர் பதவி தரமாட்டேன் என்று ராமதாஸ் கூறியுள்ளார். இந்நிலையில், விழுப்புரம் தைலாபுரம் தோட்ட சுவரில் அன்புமணி ராமதாசின் போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன. அன்புமணி ராமதாசை பாராட்டி அவரது ஆதரவாளர்களால் ஒட்டப்பட்டிருந்த போஸ்டர்கள் தற்போது அகற்றப்பட்டுள்ளன. போஸ்டர்களை அகற்றியது யார்?



என்ற விவரம் தெரியவில்லை. இதனால் அங்கு பரப்பான சூழ்நிலை நிலவுகிறது.

# மத மோதலை தூண்டும் வகையில் பேசியதாக வழக்கு: விசாரணைக்கு ஆஜராக எச்.ராஜாவுக்கு ஐகோர்ட்டு உத்தரவு




சென்னை, ஜூன் 25

மதுரை திருப்பரங்குன்றம் மலை விவகாரம் தொடர்பாக இந்து அமைப்புகள் அழைப்பு விடுத்திருந்த ஆர்ப்பாட்டத்துக்கு போலீசார் அனுமதி மறுத்திருந்தனர். இதற்கு எதிராக இந்து முன்னணி சார்பில், மதுரை ஐகோர்ட்டில் அவசர மனுதாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை விசாரித்த கோர்ட்டு, பழங்காநத்தம் பகுதியில் ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி வழங்கியது. இந்த ஆர்ப்பாட்டத்தில் வெறுப்புணர்வு, கலவரத்தை தூண்டும் வகையில் பேசக்கூடாது, முழக்கங்கள் எழுப்பக் கூடாது என்பன உள்ளிட்ட நிபந்தனைகள் விதிக்கப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பா.ஜ.க. மூத்த தலைவர் எச்.ராஜா பேசியது, மத மோதலை தூண்டும் வகையில் இருந்ததாக குற்றம் சாட்டப்பட்டது. இதையடுத்து கோர்ட்டு நிபந்தனைகளை மீறியது உள்ளிட்ட 3 பிரிவுகளின் கீழ் எச்.ராஜா மீது போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். வழக்கு விசாரணைக்காக எச்.ராஜாவுக்கு காவல்துறை நோட்டீஸ் அனுப்பியது.

இதை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் எச்.ராஜா தொடர்ந்த வழக்கின் விசாரணை நீதிபதி வேல்முருகன் முன்பு நடைபெற்றது. வழக்கை விசாரித்த நீதிபதி நோட்டீசை ரத்து செய்ய முடியாது என்று மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார். மேலும் போலீஸ் விசாரணைக்கு ஆஜராகி, ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும், நோட்டீசைஎதிர்த்து வழக்கு தொடர மனுதாரருக்கு அதிகாரம் இல்லை என்றும் நீதிபதி தெரிவித்தார்.

# வெள்ளை சட்டை அணிந்து வந்தால்தான் மரியாதை தருவீர்களா? ஐகோர்ட்டு நீதிபதி கண்டனம்



சென்னை ஜூன் 25

சென்னை நொளம்பூரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு நலச் சங்க நிதியில் முறைகேடு செய்ததாக குடியிருப்பு உரிமையாளரான நாங்குநேரியைச் சேர்ந்த வானமாமலை என்ற பட்டியலினத்தைச் சேர்ந்தவர் புகார் அளித்தார். அவரை அவமானப்படுத்தும் வகையில், குடியிருப்பு உரிமையாளர்களில் ஒருவர் வாட்ஸ் அப் குழுவில் சாதி ரீதியிலான கருத்துகளை பதிவு செய்ததாக கூறப்படுகிறது.

இதுகுறித்து புகார் அளிக்க நொளம்பூர் காவல் நிலையத்துக்கு சென்றபோது தன்னை அவமானப்படுத்திய காவல்துறை ஆய்வாளர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வானமாமலை தேசிய பட்டியலின ஆணையத்துக்கு மனு அனுப்பினார். இந்த மனுவுக்கு பதிலளிக்கும்படி சென்னை காவல்துறைக்கு ஆணையம் உத்தரவிட்டிருந்தது. இந்த நிலையில் தேசிய பட்டியலின ஆணையத்தின் அறிவிப்பின் அடிப்படையில் நொளம்பூர் காவல் ஆய்வாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் சென்னை ஐகோர்ட்டில் வானமாமலை வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு, நீதிபதி வேல்முருகன் முன்பு இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது காவல் துறை தரப்பில் பதில்மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள நபர்களுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. அப்போது குறுக்கிட்ட நீதிபதி, "மனுதாரரின் கோரிக்கை அடிப்படையில் புலன் விசாரணை அதிகாரி மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?" எனகேள்வி எழுப்பினார்.

மேலும், "காவல் ஆய்வாளர் முன்பு அமர்வதற்கு புகார்தாரருக்கு அனுமதி வழங்கப்படவில்லை. வெள்ளை சட்டையுடன் வந்தால்தான் சிவப்புகம்பளவரவேற்பு தருவீர்களா? அழுக்கு சட்டையுடன் வந்தால் புகாரை ஏற்கமாட்டீர்களா? அவர்கள் வாக்களித்தால் அந்த வாக்கை எண்ண மாட்டீர்களா? மக்கள் வரிப்பணத்தில் ஊதியம் பெற்றுக் கொண்டு, நீங்கள் சொல்பவர்தான் இருக்கையில் அமர வேண்டுமா? மற்றவர்கள் அமரக்கூடாது என்று கூறுவதற்கு நீங்கள் யார்? அரசு அலுவலகம் அனைத்து மக்களுக்குமானது" என்று நீதிபதி கண்டனம் தெரிவித்தார்.

அப்போது காவல் துறை தரப்பில், "சம்பந்தப்பட்ட காவல் ஆய்வாளர் மீது இரண்டு வாரங்களில் நடவடிக்கை எடுக்கப்படும்" என தகவல் தெரிவிக்கப்பட்டது. இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதி வழக்கின்விசாரணையை ஜூலை 15ம் தேதிக்கு தள்ளி வைத்தார்.

# திருத்தணி முருகப்பெருமானின் தனிச்சிறப்புகள்



திருவள்ளூர் ஜூன் 25

முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளில் ஐந்தாவது படைவீடாகத் திகழ்வது திருத்தணிகை. முருகப் பெருமான், தேவர்களின் துயரம் நீங்கும் பொருட்டு சூரபத்மனுடன் செய்த பெரும் போரும், வள்ளியம்மையை மணந்துகொள்ள வேடர்களுடன் விளையாட்டாக நிகழ்த்திய சிறு கோபமும் தணிந்து, அமர்ந்த தலம் என்பதால் திருத்தணிகை என பெயர் பெற்றது.

இந்த ஆலயத்தில் வழங்கப்படும் விபூதி, சந்தனம் ஆகிய பிரசாதங்கள் தீராத வியாதிகளைத் தீர்க்கும் அருமருந்தாக விளங்குகின்றன என்பது பக்தர்கள் நம்பிக்கை.

திருத்தணிகையில் பக்தர்கள் எடுக்கும் காவடி வித்தியாசமாக இருக்கும். நீண்ட குச்சியின் ஒருமுனையில்பூக்களும், மற்றொரு முனையில் அர்ச்சனைப் பொருள்களும் கட்டி காவடி எடுப்பது திருத்தணியில் மட்டுமே உள்ள வழக்கம்.

தமிழ்ப் புத்தாண்டு தினத்தில், திருத்தணி மலையின் கீழ் பகுதியில் உள்ள ஆறுமுக சுவாமி கோவிலில் இருந்து, 'முருகனுக்கு அரோகரா' என்ற சரண கோஷத்துடன் பக்தர்களால் சுமந்து செல்லப்படும் 1008 பால் குடங்கள், மலை மேல் உள்ள முருகப்பெருமானுக்கு அபிஷேகம் செய்யப்படுவது கண் கொள்ளாக் காட்சி.

மகாசிவராத்திரி அன்று தணிகை முருகனுக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெறும்.

இந்தக் கோவிலுக்கு வரும் பக்தர்கள், மூலவர் உட்பட எல்லா சன்னிதிகளையும் தரிசித்த பிறகு, நிறைவாக இங்குள்ள ஆபத்சகாய விநாயகரை வணங்க வேண்டும் என்பது ஐதீகம்.

திருமால் ஆலயங்களைப் போன்று, முருகனின் திருப்பாத சின்னத்தை (சடாரி) பக்தர்களின் தலையில் வைத்து ஆசி வழங்குவது, திருத்தணி கோவிலின் தனிச் சிறப்பு.

முருகப்பெருமான் கோபம் தணிந்து அருளும் தலம் என்பதால், திருத்தணியில் சூரசம்ஹார விழா நடைபெறுவதில்லை.

காதர் என்னும் இஸ்லாமியரால் கட்டப்பட்ட நவாப் மண்டபத்தில் ஆடிக்கிருத்திகை போன்ற திருவிழாகாலங்களில் இஸ்லாமிய நண்பர்கள் வாத்தியம் இசைக்கின்றனர்.

வள்ளலார், கண்ணாடியில் முருகப்பெருமானின் தரிசனத்தைக் கண்டு அருள்பெற்றவர். அந்த முருகப்பெருமான், திருத்தணிகை முருகப்பெருமான் ஆவார்.

திருவருட்பா நூலில் 'சீர்கொண்ட தெய்வ வதனங்கள் ஆறும்' என்ற பாடலில், முருகனின் திருவருள் தரிசனம் பெற்ற அற்புதத்தைப் பற்றி வள்ளலார் கூறியுள்ளார்.

# முருக பக்தர்கள் மாநாடு ஆன்மிகத்தில் நம்பிக்கையுள்ள தமிழக மக்களின் வெற்றியாக அமைந்திருக்கிறது ஜி.கே.வாசன்

சென்னை, ஜூன் 25

த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

தமிழ்நாட்டு மக்கள் ஆன்மிகத்தில் மிகுந்த நம்பிக்கை வைத்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. நேற்று மதுரையில் நடைபெற்ற முருக பக்தர்கள் மாநாடு இதற்கு சாட்சி. மதுரை வண்டியூர், பாண்டி கோவில், சுங்கச்சாவடி பகுதியில் உள்ள அம்மா திடலில் முருக பக்தர்கள் மாநாடு நடைபெற்றது.

மாநாட்டு வளாகத்தில் முருகப்பெருமானின் அறுபடை வீடுகளின் மாதிரி கோயில்கள் அமைக்கப்பட்டு, முருகரை தரிசனம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது பெரிதும் பாராட்டத்தக்கது. தமிழ்க்கடவுள் முருகன் தமிழர்களின் நம்பிக்கைக்குரிய கடவுள்.

அந்த நம்பிக்கைக்கு ஏற்ப தமிழர்கள் பெருந்திரளாக முருக பக்தர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு முருகரை தரிசித்திருப்பது வாழ்த்துக்குரியது. முருக பக்தர்கள் மாநாட்டை ஒட்டி நானும் அங்கு சென்று முருகப்பெருமானை தரிசனம் செய்தது மனதிற்கு திருப்தியை அளித்தது. குறிப்பாக ஒரே இடத்தில் அமைக்கப்பட்டுள்ள அறுபடை வீடுகளை தரிசிக்க முருக பக்தர்கள், சக்தி வார வழிபாட்டு மன்றத்தினர், ஐயப்ப பக்தர்கள் சங்கத்தினர், சாய்பாபா பக்தர்கள், ஆன்மிகவாதிகள் என பல்வேறு பக்தி குழுக்களை சேர்ந்தவர்கள் மற்றும் பொதுமக்கள் குடும்பம் குடும்பமாக சென்று முருகரை தரிசனம் செய்திருப்பது பெருமைக்குரியது.

முருகனை காணச் சென்றவர்கள் அனைவருக்கும் குடிநீர், பிரசாதம், பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து வசதிகளும் முறையாக செய்து கொடுக்கப்பட்டது. முருக பக்தர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு தரிசனம் செய்த அனைவரும் முருகனின் அருளும், ஆசியும் பெற்று வாழ்வில் முன்னேறுவார்கள்.

தமிழ்நாட்டிற்கும், தமிழக மக்களுக்கும் முருக பக்தர்கள் மாநாடு வருங்காலத்தில் நல்லது நடக்க, நன்மை பயக்க வழி வகுக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக ஆன்மிகம் மிகவும் சக்தி வாய்ந்தது. அதற்கு தடை ஏற்படுத்தினால் ஆன்மிக சக்தி அந்த தடைகளை தகர்த்தெறியும் என்பது இந்த மாநாட்டின் வெற்றி மூலம் நிரூபணம் ஆகியிருக்கிறது.

மாநாட்டிற்கு ஏற்பாடு செய்து மிகச்சிறப்பாக நடத்தியிருக்கும் இந்து முன்னணி அமைப்பினர் உள்ளிட்ட அனைவருக்கும் தமிழ் மாநில காங்கிரஸ்(மூ) சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
25.6.2025

# தென்காசி: முதியோர் காப்பகத்தில் உணவு ஒவ்வாமை விவகாரம்; பலி எண்ணிக்கை 6 ஆக உயர்வு



தென்காசி, ஜூன் 25

தென்காசியில் சுந்தரபாண்டியபுரத்தில் தனியார் முதியோர் காப்பகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில், கடந்த வாரம் உணவு ஒவ்வாமையால் 4 பேர் அடுத்தடுத்து உயிரிழந்தனர். அவர்கள் மதுரை மற்றும் தென்காசியை சேர்ந்தவர்கள் என தெரிய வந்தது. அவர்களில் 3 பேர் பெண்கள். ஒருவர் ஆண் ஆவார்.

இந்த விவகாரத்தில், முதியோர் காப்பக நிர்வாகி ராஜேந்திரன், சாம்பவர்வடகரை போலீசாரால் கைது செய்யப்பட்டார். அவரிடம் தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.

இந்த நிலையில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த மேலும் ஒருவர் கடந்த 17ந்தேதி பலியானார். இதனால், முதியோர் காப்பகத்தில் உணவு ஒவ்வாமை விவகாரத்தில் பலி எண்ணிக்கை 5 ஆக உயர்வடைந்தது. இந்தசூழலில், சிகிச்சை பெற்று வந்தவர்களில் மற்றும் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்து உள்ளார்.

இதனால், பலி எண்ணிக்கை 6 ஆக உயர்ந்துள்ளது. நெல்லை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மேலும் 10 பேர் சிகிச்சையில் உள்ளனர்.

# தனியார் பள்ளிகளில் 25 சதவீத இட ஒதுக்கீடு பயன்பாட்டில் உள்ளதா? ராமதாஸ் கேள்வி



சென்னை, ஜூன் 25

பாமக நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது;

"முன்பு தமிழக அரசு ஏழை எளிய மக்களும் நல்ல கல்வி முறையை பயில வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் அரசு நிதி உதவியுடன் தனியார் பள்ளிகளில் 25% சதவீதம் வரைகல்வி பயின்று பயன் பெறலாம் என்று உத்தரவிட்டிருந்தனர். இந்தத் திட்டத்தை மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும் முறைகேடுகள் நடந்திடா வண்ணம் பார்த்துக் கொள்ளவும் அந்தந்த பள்ளிகள் அமையப் பெற்ற இடங்களின் அந்தந்தப் பகுதி உள்ளாட்சி பிரதிநிதிகள் தலைமையில் 2013 ம் ஆண்டு அமைக்கப்பட்ட குழுக்கள் என்ன ஆனது? அதனை தற்பொழுது முறைகேடாக தனியார் பள்ளிகள் பயன்படுத்தி வருவதை கண்டு மனம் வேதனை அடைகிறது.

அதோடு மட்டுமல்லாமல் தனியார் பள்ளிகளை பொறுத்தவரை சிபிஎஸ்இ மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் சேர்க்கை கட்டணம் என்ற பெயரிலும், சிறப்பு வகுப்புகள் என்ற பெயரிலும் பெற்றோர்களிடம் தேவையற்ற கட்டணங்களை நவீன முறையில் வசூல் செய்து வருகிறார்கள். கட்டணம் வசூல் செய்யும் முறையினை பொறுத்தவரை பள்ளி கல்வித்துறையின் வழிகாட்டு முறையினை ஒரு சிறிது அளவு கூட இவர்கள் பின்பற்றவில்லை என்பது கண்கூடாக தெரிகிறது. அந்த வகையில் சேர்க்கை கட்டணம் என்பது 10,000 ரூபாயில் துவங்கி 25 ஆயிரம் வரை வசூல் செய்யப்படுகிறது.

அதேபோன்று சிறப்பு வகுப்பு என்ற பெயரில் 25,000 துவங்கி 35 ஆயிரம் வரை வசூல் செய்யப்படுகிறது. பள்ளிக்கு வரும் குழந்தைகள் காலையில் ஒரு மணி நேரத்திற்கு முன்பாகவும் மாலையில் ஒரு மணி நேரத்திற்கு பிறகும் இல்லத்திற்குச் செல்ல வேண்டும். அப்படி என்றால் 2 மணி நேரம் கூடுதலாக வகுப்பு நடத்துகிறார்கள். 6 மணி நேரத்தில் நடத்திட முடியாத பாடத்தினை இரண்டு மணி நேரத்தில் என்ன நடத்த போகிறார்கள் இவர்கள். இத்தகைய செயல் என்பது முறைகேடாக கல்வி கட்டணங்களை வசூலிப்பதற்காகவே உருவாக்கப்பட்டதாக தெளிவாகத் தெரிகிறது. எனவே இதனை தமிழக அரசு உடனடியாக தடுத்து நிறுத்திட இதன் மூலம் கேட்டுக் கொள்கிறேன்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பரமத்திவேலூர்: முருகன் கோவில்களில் ஆனி கிருத்திகை சிறப்பு வழிபாடு



நாமக்கல், ஜூன் 25

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் பேட்டை பகவதி அம்மன் கோவில், கோப்பணம் பாளையம் பரமேஸ்வரர் ஆலயத்தில் உள்ள பாலமுருகன் கோவிலில் உள்ள முருகப்பெருமானுக்கு ஆனி மாத கிருத்திகையை முன்னிட்டு, பால், தயிர், பன்னீர், இளநீர், சந்தனம், மஞ்சள், திருமஞ்சனம், பஞ்சாமிர்தம், தேன், விபூதி, கரும்புச்சாறு உள்ளிட்ட 18 வகையான பொருட்களால் அபிஷேகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை காட்டப்பட்டது. பின்னர் சிறப்பு அலங்காரத்தில் முருகப்பெருமான் பக்தர்களுக்கு காட்சி அளித்தார். இதில் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு முருகப் பெருமான் மற்றும் பரிவார தெய்வங்களை தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

அதேபோல், நன்செய் இடையாறு காவிரி ஆற்றங்கரை அருகே உள்ள மூங்கில் வனத்து சங்கிலி கருப்பண்ணசாமி கோவில் வளாகத்தில் உள்ள வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர் கோவில், மோகனூர் பாலசுப்பிரமணிய சுவாமி கோவில், கபிலர் மலை பாலசுப்பிரமணியசுவாமி கோவில், பரமத்தி அருகே உள்ள பிராந்தகத்தில் 34.5 அடி உயரமுள்ள ஆறுமுகக்கடவுள், பாண்டமங்கலம் புதிய காசி விஸ்வநாதர் கோவிலில் உள்ள சுப்ரமணியர்,

பொத்தனூர் அருகே உள்ள பச்சமலை முருகன், அனிச்சம்பாளையத்தில் வேல்வடிவம் கொண்ட சுப்ரமணியர், பிலிக்கல்பாளையம் விஜயகிரி வடபழனி ஆண்டவர் கோவில், நன்செய் இடையாறு திருவேலீஸ்வரர் கோவிலில் உள்ள சுப்ரமணியர், நன்செய் இடையாறு ராஜா சுவாமி திருக்கோவிலில் உள்ள ராஜாசுவாமி,

பாலப்பட்டி கதிர்மலை கந்தசாமி மற்றும் கந்தம்பாளையம் அருணகிரிநாதர் மலையில் உள்ள வள்ளி, தெய்வான சமேத சுப்பிரமணியர் மற்றும் பரமத்தி வேலூர் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள முருகன் கோவில்களில் முருகப்பெருமானுக்குகிருத்திகையை முன்னிட்டு சிறப்பு அபிஷேகமும், சிறப்பு அலங்காரமும் நடைபெற்றது. இதில் அந்தந்த பகுதிகளைச் சேர்ந்த பக்தர்கள் கலந்துகொண்டு முருகப்பெருமானை தரிசனம் செய்தனர்.

# இன்றைய ராசி பலன்கள் (25.6.2025)

மேஷம்: சுகாதாரத்திற்கு சிறந்த நாள். திடீர் பயணங்கள் நடத்த நேரிடும். பண வரவு நன்மை தரும்.

ரிஷபம்: பண மற்றும் குடும்பத்தில் அமைதி இருக்கும். நல்ல உறவுகள் உருவாகும்.

மிதுனம்: தொழிலில் புதிய வாய்ப்புகள் உருவாகலாம். குடும்பத்தில் சிறிது சிக்கல்கள் இருந்தாலும், சமாதானம் அடைவீர்கள்.

கடகம்: மனதிற்கு அமைதி கிடைக்கும். புதிய முயற்சிகள் மற்றும் தொழிலில் சீரான வளர்ச்சி உள்ளது.

சிம்மம்: நாளை உங்கள் திறமைகளை வெளிப்படுத்தும் நல்ல நேரம். பண விஷயங்களில் நிதி பலன் கிடைக்கும்.

கன்னி: குடும்பத்தின் ஆறுதல் கிடைக்கும். ஒத்துழைப்பு மற்றும் நன்மைகள் கிடைக்கும்.

துலாம்: நிதி நிலைமை மேம்படும். தொழில்முனைவோர்களுக்கு புதிய வாய்ப்புகள்.

விருச்சிகம்: உங்களின் பணி மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையில் சிறந்த முன்னேற்றம். ஆதரவு கிடைக்கும்.

தனுசு: உங்களது வாழ்க்கையில் புதிய பரிமாணங்கள் தோன்றும். பணத்தில் புதிய வாய்ப்புகள் கிட்டும்.

மகரம்: பணத்தில் சிந்தனையை மாற்றிக் கொண்டு பெரிய முன்னேற்றம் கிடைக்கும். குடும்பத்தில் நல்ல காலம்.

கும்பம்: ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய நாள். உடல்நல பராமரிப்பு செய்ய வேண்டும்.

மீனம்: 12.இந்தநாள்அமைதியானது. தொழிலில் புதிய முயற்சிகளைத் தொடங்க முடியும்.

# சிதம்பரம் நடராஜர் கோவிலில் ஆனி திருமஞ்சன விழா கொடியேற்றத்துடன் தொடக்கம்



கடலூர் ஜூன் 26

உலக புகழ் பெற்ற சிதம்பரம் நடராஜர் கோவிலில், ஆனி திருமஞ்சன விழா கொடியேற்றத்துடன் வெகு விமரிசையாக இன்று காலை தொடங்கியது. இதனை முன்னிட்டு, சிவ வாத்தியங்கள் மற்றும் வேத மந்திரங்கள் முழங்க கம்பத்தில் கொடி ஏற்றப்பட்டது.

நடராஜர் கோவிலின் சித்சபைக்கு எதிரேயுள்ள கொடி மரத்தில், திரளான பக்தர்கள் முன்னிலையில் கொடியேற்ற நிகழ்ச்சி நடந்தது. அப்போது, பக்தர்கள் பக்தியுடன் இறைவனை வேண்டி கொண்டனர்.

இதில், முக்கிய நிகழ்ச்சியாக ஜூலை 1ந்தேதி தேரோட்டம் நடைபெறுகிறது. 2ந்தேதி ஆனி திருமஞ்சன தரிசன விழா நடைபெறும். கொடியேற்ற விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

# 'பீரிடம்' படத்தின் படப்பிடிப்பு நிறைவு.. கேக் வெட்டி கொண்டாடிய படக்குழு



சசிகுமார் மற்றும் சிம்ரன் நடிப்பில் அண்மையில் டூரிஸ்ட் பேமிலி திரைப்படம் வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. இப்படத்தின் வெற்றி தொடர்ந்து சசிகுமார் பீரிடம் படத்தில் நடித்துவருகிறார். இந்த படத்தினை சத்யசிவா இயக்குகிறார்.

இதில் கதாநாயகியாக லிஜோமோல் ஜோஸ் நடிக்கிறார். இப்படத்திற்கு ஜிப்ரான் இசையமைத்துள்ளார். தவறே செய்யாமல் இலங்கை அகதிகளாக சிறைச்சாலையில் சிக்கிக்கொண்ட இருவர் தப்பித்து செல்வதுப் போன்ற கதைக்களத்தில் இப்படம் அமைந்துள்ளது. இத்திரைப்படம் வரும் ஜூலை 10 ஆம் தேதி வெளியாக உள்ளது.

இந்த நிலையில், விறுவிறுப்பாக நடைபெற்று வந்த இப்படத்தின் இறுதிகட்ட படப்பிடிப்பு பணிகள் நிறைவடைந்துள்ளது. படப்பிடிப்பு நிறைவடைந்ததையொட்டி படக்குழுவினர் கேக் வெட்டி கொண்டாடி உள்ளனர்.

# ஓஹோ எந்தன் பேபி படத்தின் டைட்டில் டிராக் வெளியீடு




தமிழ் சினிமாவின் முன்னனி நடிகர் விஷ்ணு விஷால். இவருடைய தம்பி ருத்ரா 'ஓஹோ எந்தன் பேபி' என்ற படத்தில் மூலம் தமிழ் சினிமாவில் முதல் முறையாக அறிமுகமாகி உள்ளார். இந்த படத்தினை விளம்பரப் பட இயக்குனரும், குணச்சித்திர நடிகருமான கிருஷ்ணகுமார் இயக்கியுள்ளார். இதில் பாலிவுட் நடிகை மிதிலா பால்கர் கதாநாயகியாக நடித்துள்ளார்.

இந்தப் படத்தை விஷ்ணு விஷால் ஸ்டூடியோஸ், ரோமியோ பிக்சர்ஸ் மற்றும் டிகம்பெனி இணைந்து தயாரித்துள்ளன. இந்த படத்திற்கு தர்புகா சிவா இசையமைத்துள்ளார். இத்திரைப்படம் வருகிற ஜூலை 11ம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது. இந்நிலையில், 'ஓஹோ எந்தன் பேபி' படத்தின் டைட்டில் டிராக் வெளியாகி உள்ளது.

# ஒவ்வொரு நாளும் வலியுடன் வேலை செய்கிறேன் சல்மான்கான் வேதனை



பாலிவுட் சினிமாவில் முன்னணி நடிகராக இருப்பவர் சல்மான் கான். இவர் சமீபத்தில் நடந்த 'தி கிரேட் இந்தியன்' என்ற பிரபல நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

சல்மான்கான் உடல்நிலை குறித்து பல்வேறு தகவல்கள் பரவி வரும் நிலையில், அது குறித்து அவர் நிகழ்ச்சியில் பேசியுள்ளார். அதாவது, "எனக்கு உடலில் பல பிரச்சினைகள் இருந்த போதும் நான் 59 வயதிலும் வேலை செய்து கொண்டிருக்கிறேன். என்னை திருமணம் செய்து கொள்பவர் என்னை பிரிய முடிவெடுத்து என்னுடைய பாதி பணத்தை எடுக்க முடிவு செய்தால் மீண்டும் முதலில் இருந்து தாடங்குவதற்கு என்னிடம் துணிச்சல் இல்லை.

நான் ஒவ்வொரு நாளும் வலியிலும் வேலை செய்கிறேன். முகத்தில் உண்டாகும் ஒரு வகை நரம்பு வலியான டிரைஜீமினல் நியூரால்ஜியா ரத்த நாளங்களில் வீக்கம், தமனி குறைபாடு போன்றவற்றால் நான் பாதிக்கப்பட்டிருந்தாலும் நான் செயல்படுவதை நிறுத்தவில்லை" என்றார்.

# கூலி படத்தின் பர்ஸ்ட் சிங்கிள்.. அப்டேட் கொடுத்த படக்குழு

'சூப்பர் ஸ்டார்' ரஜினிகாந்த் 'வேட்டையன்' படத்தின் வெற்றிப்பிறகு தற்போது லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் 'கூலி' படத்தில் நடித்து முடித்துள்ளார். இந்த படத்தில் நாகார்ஜுனா, உபேந்திரா, சோபின் சாஹிர், சத்யராஜ், சுருதிஹாசன் என நட்சத்திர பட்டாளங்களே நடித்துள்ளனர். மேலும் கேமியோ ரோலில் பாலிவுட் நடிகர் அமீர்கான் நடித்துள்ளார்.

இப்படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். நடிகை பூஜா ஹெக்டே சிறப்பு பாடல் ஒன்றில் நடனமாடியுள்ளார். இந்த படத்தின் படப்பிடிப்பு பணிகள் நிறைவடைந்த நிலையில், தற்போது இதன் போஸ்ட் புரொடக்சன் வேலைகள் நடைபெற்று வருகின்றன. தங்க கடத்தலை மையமாக கொண்டு உருவாகப்பட்டுள்ள, இப்படம் வருகிற ஆகஸ்ட் 14ந் தேதி வெளியாக உள்ளது.

இந்த நிலையில் இப்படத்தின் பர்ஸ்ட் சிங்கிள் குறித்த அறிவிப்பை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி, பர்ஸ்ட் சிங்கிளான சிக்கிட்டு என்ற பாடல் வருகிற 25ந் தேதி மாலை 6 மணிக்கு வெளியாகும் என்று அறிவித்துள்ளது.

# டி.என்.பி.எல். கிரிக்கெட்: திருச்சியை வீழ்த்தி சேப்பாக் சூப்பர் கில்லீஸ் திரில் வெற்றி



டி.என்.பி.எல். தொடரில் நெல்லையில் இன்று நடைபெற்று வரும் 21வது லீக் ஆட்டத்தில் சேப்பாக் சூப்பர் கில்லீஸ் திருச்சி கிராண்ட் சோழாஸ் அணிகள் விளையாடின. இதில் டாஸ் வென்ற திருச்சி அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் பேட்டிங் செய்த சேப்பாக் அணிக்கு தொடக்க ஆட்டக்காரர்கள் ஆன ஆஷிக் 5 ரன்களிலும், மொகித் ஹரிகரன் 25 ரன்களிலும் ஆட்டமிழந்தனர். இதனையடுத்து கேப்டன் பாபா அபராஜித் விஜய் சங்கர் ஜோடி சேர்ந்து அணியை சரிவிலிருந்து மீட்டனர்.

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இருவரும் அரைசதம் அடித்து அசத்தினர். இவர்களில் பாபா அபராஜித் 63 ரன்களிலும், விஜய் சங்கர் 59 ரன்களிலும் ஆட்டமிழந்தனர். இவர்களின் பொறுப்பான ஆட்டத்தில் சேப்பாக் சூப்பர் கில்லீஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 178 ரன்கள் அடித்தது.

இதனையடுத்து 179 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற சவாலான இலக்கை நோக்கி திருச்சி அணி விளையாடியது. தொடக்க ஆட்டகாரர்களாக வசீம் அகமது மற்றும் ஜெயராமன் சுரேஷ்குமார் களமிறங்கினர். நிதானமான ஆடிய வசீம் அகமது 10 ரன்களிலும், ஜெயராமன் சுரேஷ்குமார் 63 ரன்களிலும் ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த ஜெகதீசன் கவுசிக் 43 ரன்களிலும், ஜாபர் ஜமால் 6 ரன்களிலும், ராஜ்குமார் 6 ரன்களிலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இதையடுத்து இறங்கிய சஞ்சய் யாதவ், முகிலேஷ் பொறுமையான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இருப்பினும் திருச்சி அணியால் இலக்கை எட்ட முடியவில்லை.

இறுதியில், திருச்சி அணி 20 ஓவர் முடிவில் 174 ரன்கள் எடுத்து 6 விக்கெட்டுகளை இழந்தது. இதன்மூலம் 4 ரன்கள் வித்தியாசத்தில் சேப்பாக் சூப்பர் கில்லீஸ் அணி திரில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் சேப்பாக் அணி 6வது வெற்றியை பதிவு செய்தது. சேப்பாக் அணி சார்பில் அதிகபட்சமாக பிரேம் குமார் 3 விக்கெட்டுகளையும், விஜய் சங்கர், ரோகித் சுதர், சிலம்பரசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

# முதல் டெஸ்ட்; கே.எல்.ராகுல், பண்ட் சதம்.. இங்கிலாந்து அணிக்கு 371 ரன்கள் இலக்கு நிர்ணயித்த இந்தியா



இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி லீட்சில் நடந்து வருகிறது. இதில் முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி ஜெய்ஸ்வால், கேப்டன் சுப்மன் கில், ரிஷப் பண்ட் ஆகியோரது செஞ்சுரியால் முதல் இன்னிங்சில் 471 ரன்கள் குவித்தது.

பின்னர் தனது முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி 100.4 ஓவர்களில் 465 ரன்கள் எடுத்து ஆல்அவுட் ஆனது. அதிகபட்சமாக ஆலி போப் 106 ரன்களும், ஹாரி புரூக் 99 ரன்களும் அடித்தனர். இந்தியா தரப்பில் வேகப்பந்து வீச்சாளர் பும்ரா 5 விக்கெட்டுகளை அள்ளினார்.

இதனையடுத்து 6 ரன்கள் முன்னிலையுடன் 2வது இன்னிங்சை தொடங்கிய இந்திய அணி 3வது நாள் முடிவில் 23.5 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கு 90 ரன்கள் அடித்திருந்தது. லோகேஷ் ராகுல் (47 ரன்), கேப்டன் சுப்மன் கில் (6 ரன்) களத்தில் நின்றனர். இந்த சூழலில் இன்று 4வது நாள் ஆட்டம் நடைபெற்று வருகிறது. ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே சுப்மன் கில் 8 ரன்களில் அவுட்டானார்.

இதனையடுத்து கே.எல்.ராகுல் பண்ட் ஜோடி சேர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இருவரும் சதம் விளாசி அசத்தினர். சதமடித்த சிறிது நேரத்திலேயே பண்ட் 118 ரன்களில் ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய வீரர்களில் யாரும் நிலைத்து விளையாடவில்லை. கருண் நாயர் 20 ரன்களிலும், ஷர்துல் தாகூர் 4 ரன்களிலும், சிராஜ் மற்றும் பும்ரா டக் அவுட்டிலும் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தனர். சிறப்பாக ஆடிகொண்டிருந்த கே.எல்.ராகுலும் 137 ரன்களில் ஆட்டமிழந்தார்.

96 ஓவர்கள் தாக்குப்பிடித்த இந்திய அணி 2வது இன்னிங்சில் 364 ரன்களில் ஆட்டமிழந்தது. இதன் மூலம் இங்கிலாந்து அணிக்கு 371 ரன்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்து தரப்பில் ஜோஷ் டங் மற்றும் பிரைடன் கார்ஸ் தலா 3 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

இதனையடுத்து 371 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி இங்கிலாந்து களமிறங்க உள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.